

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.

மத்தேயு - 5:48

செய்தி மலர்
2021
மார்ச்

இதழ் : 11
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் மார்ச் மாதம் முழுவதும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவாராக.

இப்பொழுதுதான் வருடம் ஆரம்பித்தது போல இருக்கிறது அதற்குள் இரண்டு மாதங்கள் ஒடி மறைந்து விட்டது. வேதம் சொல்வதைப் போல நாட்கள் பொல்லாதவைகள் ஆனதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். மோசே ஜெபித்தது போல நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்கு போதித்தருளும் என்று அனுதினமும் ஜெபித்து ஆண்டவருக்குள் நம்மை திடப்படுத்திக்கொள்வோம்.

இந்த மாத்தில் நாம் தியானிக்க வேண்டிய வசனம் "அன்றியும் நன்மை செய்யவும் தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்பதாகும் (எபி-13:16)

## 1. நன்மை செய்யவும்..

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுது அவர் நன்மை செய்கிறவராகவும், பிசாசின் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார். (அப்-10:38)

இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்தபொழுது அவர் சொன்னார் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராய் இருக்க கடவீர்கள். (மத்-5:48) ஆம் அவர் நல்லோர் மேலும் பொல்லோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத்-5:45)

நன்மை செய்கிறவர்களுக்கு நன்மை செய்வது என்பது மனித சுபாவம். பொல்லாவதற்கு கூட இதை செய்கிறார்கள். இதிலே எந்தவிதமான வியப்பும் இல்லை. நன்மை செய்பவர்களுக்கே தீமை செய்வது அது பிசாசின் குணம். மகிமையாய் படைக்கப்பட்ட மனுக்குலத்தை பிசாசு கெடுத்து நாசமாக்கிப்போட்டான்.ஒரு பாவமும் அறியாத ஏவாளையும், ஆதாமையும் அவன் அழித்துப்போட்டான்.

3 அதனால் தான் இயேசு பிசாசை மனுஷ கொலை பாதகன் என்று குறிப்பிடுகிறார். ஆனால் தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்வது தெய்வத்தின் சுபாவம். தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும், தன் வஸ்திரங்களை தங்களுக்குள் பங்கிட்டு கொண்டவர்களையும், நன்றி மறந்த துரோகிகளையும் அவர் மனதார மன்னித்தார்.(லூக்-23:33)

உனக்கடுத்தவனை சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லபட்டதை கேள்விபட்டடிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பபடுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத்-5:43,44)இதுதான் இயேவின் சுபாவம்.

இதைத் தான் நாம் கடைபிடிக்க வேண்டுமென்று இயேசு சொல்லி கொடுத்திருக்கிறார். இந்த லெந்து காலங்களிலே அதிகமாய் இயேசு மேற்சொன்ன காரியங்களை தியானித்து நம் வாழ்க்கையில் அவைகளை கடைப்பிடிக்க தீர்மாணிப்போம்.

## உ.தான தர்மம் பண்ணவும்..

நம்மை விட வசதி குறைந்தவர்களுக்கு நாம் செய்கிற தர்ம காரியங்கள் பரலோகத்தை சென்று அடைகிறது. தர்ம காரியங்கள் என்றால் என்ன? பிரதிபலன் கருதாமல் உதவி செய்வது என்று அர்த்தமாகும். அதாவது நாம் செய்கிற உதவிகளுக்கும் ஒத்தாசைகளுக்கும் கைமாறாக திருப்பி கொடுக்க முடியாதவர்களுக்கு நாம் உதவிகள் செய்ய வேண்டும். கொர்நேலியு என்ற புறஜாதியான் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த பொழுது ஆண்டவர் பேதுருவை அழைத்து அவன் வீட்டிற்கு போய் ஞானஸ்நானம் கொடுக்கும்படி சொன்னார். தேவ தூதன் கொர்நேலியுவுக்கு தரிசனமாகி "உன் ஜெபங்களும், உன் தர்மங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்து எட்டியிருக்கிறது" அப்-10:4) என்று. பேதுருவும் "கொர்நேலியுவே உன் ஜெபம் கேட்கப்பட்டது உன் தான தர்மங்கள் தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டது" (அப்-10:31)என்று கூறினான். பாருங்கள் தான தர்மம் செய்கிறவனுடைய ஜெபம் உடனடியாக கேட்கப்படுகிறது. அதேவிதமாக தொற்காள் என்ற சீஷி அநேக தான தர்மங்களை செய்து கொண்டிருந்தவள் மரித்தபொழுது இதே பேதுருவை ஆண்டவர் அவள் வீட்டிற்கு அனுப்பி அவளை உயிரடையும்படி செய்தார். அவள் நற்கிரியைகளையும் தர்மங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள். இந்த தொற்காள் உயிரடைந்ததின் நிமித்தம் யோப்பா பட்டணம் முழுவதும் இரட்சிக்கப்பட்டது. அல்லேலூயா.

என் அன்பு சகோதர சகோதரிகளே, நாம் செய்கிற தான தர்மங்கள் நமக்கு மட்டும் ஆசீர்வாதங்களை கொண்டு வருவதில்லை. நம்முடைய ஜெபம் மட்டும் கேட்கப்படுவதில்லை நம் மூலம் நாம் வாழ்கின்ற சமூதாயத்திற்கே ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது.

## 3.தேவனுக்கு பிரியமான பலி..

பழைய ஏற்பாட்டின் காலத்திலே எத்தனையோ வகையான பலிகள் இருந்தது. குற்றநிவாரணபலி, பாவ நிவாரண பலி, போஜன பலி, சர்வாங்க தகன பலி, சமாதான பலி, அசைவாட்டும் பலி இந்த எல்லா பலிகளையும் இயேசு கிறிஸ்து ஒரே நபராக வந்து சிலுவையிலே செலுத்தி தீர்த்தார். இனி இது போன்ற பலிகளை நாம் செலுத்த வேண்டியதில்லை. ஆண்டவர் நமக்கு பாராட்டின அன்புக்கு பிரதி உபகாரமாக நாம் நன்றி பலிகளை மட்டும்தான செலுத்த முடியும். நன்றி பலிகளை எப்படி செலுத்த முடியும்? பிறருக்கு செய்கிற தான தர்மங்கள் மூலமாக. இது ஆண்டவருக்கு மிகவும் பிரியமான பலி. இதை செய்தால் போதும். நம் வாழ்க்கையில் ஆண்டவர் இதைத் தான் எதிர்பார்க்கிறார். "மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாஞ்செய்து இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்த கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். என்னத்தை கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து உன்னதமான தேவனுக்கு முன்பாக பணிந்துகொள்வேன்? தகன பலிகளைக்கொண்டும், ஒரு வயதுக் கன்று குட்டிகளை கொண்டும், அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாய் இருப்பாரோ? என் அக்கிரமத்தை போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தை போக்க என் கர்ப்பக்கனியையும், கொடுக்க வேண்டுமோ?" (மீகா–6:6–8)

ஆகவே தான தர்மங்களை செய்கின்றபொழுது அது ஆண்டவருக்கு பிரியமாய் இருப்பது மாத்திரமல்ல என் அக்கிரமம், என் ஆத்தும பாவம் எல்லாவற்றினின்றும் நமக்கு மன்னிப்பு கிடைக்கிறது.

பிரியமானவர்களே, இந்த லெந்து காலங்களிலே நாம் செய்கிற உபவாசம், ஜெபம், தியானம் இவைகளெல்லாம் தான தர்மங்கள் செய்வதற்கு நம்மை பக்குவப்படுத்தட்டும். உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக. (மத்–22:39)என்று இயேசு கிறிஸ்து சொன்ன உபதேசத்தின் அர்த்தத்தை உண்மையாய் உணர்ந்து மற்றவர்களுக்காக வாழ நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை அன்புக்காணிக்கையாய் ஆண்டவருக்கு அர்ப்பணிப்போம். இது போன்ற அர்ப்பணிப்பின் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக தன்

ஊழியத்தின் ஆரம்பத்தை நாற்பது நாட்கள் உபவாசமிருந்து ஆண்டவர் ஆரம்பித்தார். அதைத் தான் லெந்து காலங்களில் நினைவு கூறுகிறோம். (லூக்- 4:1-13)

நாமும் நம் வாழ்க்கையை ஆண்டவருக்கு அர்ப்பணிப்போம் இந்த லெந்து காலம் நம் வாழ்க்கையில் அர்த்தமுள்ள லெந்து காலமாக அமையட்டும்.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக.

கிறிஸ்த்துவுக்குள்
அன்பு சகோதரன்
சபையன் ஊழியர் சகோ. ஸ்டாலின்

(மிஷனரி பகுதியின் தொடர்ச்சி)

இவர்கள் குடும்பமாக தேவபணி செய்தனர். குக் குடும்பத்தினருடன் சேர்ந்து முழு புதிய ஏற்பாட்டையும் மொழிபெயர்த்து முடித்தார். திடீரென ஜேம்ஸ் பிரேசருக்கு மலேரியா ஜீரம் கண்டது. அதை அவர் கண்டறிவதற்குள் மலேரியா கிருமிகள் அவரது மூளையைத் தாக்கியிருந்தன. தொடர்ந்து இரண்டு நாட்கள் கடுமையான காய்ச்சலினால் கஷ்டப்பட்ட அவர் சுய நினைவிழந்தார். 1938-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் நாள் ஜேம்ஸ் தனது 52-ம் வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து தான் ஆசையாக நேசித்த பரமனின் பாதத்தில் இளைப்பாறச் சென்றார். பாலோஷான் ஆலயத்தில் நடந்த அவரது அடக்க ஆராதனை முழுவதுமாக லிசு மொழியிலேயே நடத்தப்பட்டது. பாலோஷானில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான லிசு பழங்குடிகள் பாடிய துதிப்பாடல்கள் சுற்றிலுமிருந்த மலைகள் பள்ளத்தாக்குகள் எங்கும் எதிரொலித்து ஜேம்ஸ் பிரேசரின் ஊழிய வாழ்க்கைக்கு சாட்சி பகர்ந்தன. இவரால் வழிநடத்தப்பட்ட லிசு இனத்தவர் பின்னர் புரட்சியாளர்களால் கொடுமைப் படுத்தப்பட்ட வேளையில்கூட தாங்கள் திட விசுவாசத்திலிருந்து பின்வாங்கவில்லை. இன்றும் இந்த இனத்தவரில் பலர் மியான்மாரிலும் சீனாவிலும் சாட்சியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

கட்டடம் கட்டும் பொறியியல் பட்டப்படிப்பு முடித்த ஒரு ஜேம்ஸ் பிரேசர் தேவனுக்கு தன்னை அர்ப்பணித்தபோது பாவத்தில் கட்டப்பட்டிருந்த லிசு மக்களை கட்டவிழ்க்க தேவன் பயன்படுத்தியதோடு அம்மக்கள் மத்தியில் தேவ ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பும் சிற்பியாகவும் மாற்றினார். அவரால் திருப்பப்பட்ட லிசுமொழி வேதாகமம் இன்றும் நிரந்தர ஊழியன்போல அம்மக்கள் மத்தியில் செயலாற்றி வருகிறது. இன்றைய ஜேம்ஸ் பிரேசர்களுக்காய் தேவன் ஏக்கமாய் காத்துக்கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரா்
சுகுமார்

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.( யாக்கோபு 1:12)

கர்த்தருடைய மகா பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வர்த்துக்கள்! மீண்டுமாக தங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்!

ஆண்டவருடைய சிலுவைபாடுகளை தியானித்து கொண்டிருக்கும் இந்த நாட்களில் இந்த ஆண்டவரது வர்த்தை தங்களுக்கு மிகவும் பிரயோஜனம் உள்ளதாக இருக்கும் என்று கார்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவரது சிலுவைபாடுகளை நாம் தியானித்து உபவாசித்து ஜெபத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கிற நமக்கு ஜெயத்தைவிட சோதனை அதிகமாக இருக்கலாம், சோர்ந்து போக வேண்டாம் இது அண்டவரால் அனுமதிக்கபட்டு சாத்தானால் வரும் சோதனையே தவிர வேறொன்றும் அல்ல.

சோதிப்பது சோதனைக்குள்ளாக்குவது என்பது ஆண்டவரது செயல் என்று உலகத்தாரும் கூறுவதுண்டு . ஆண்டவரது நாமத்தை தொழுகிற நாம் தெரிந்து கொள்ளவேண்டியதும் இதுதான். சாத்தானும் சோதிப்பான் எப்பொழுது என்று பார்த்தால் அவரது (ஆண்டவரது) அனுமதியோடு வரும் சோதனையே என்பது. எடுத்துகாட்டாக யோபு பக்தனின் வாழ்க்கையில் நடந்த சோதனை.ஆண்டவரால் அனுமதிக்கபட்டது, ஆண்டவரது நாமம் மகிமையடையும் படி. அந்த அளவுக்கு நாம் விசுவாசமுள்ளவாகளாக இருக்கிறோமா? ஆண்டவர் என்னை கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன். அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; (யோபு 13:15) என்று யோபு சொல்கிறார்.சோதனை வேளையில் தேவன் நம்மோடு இருப்பார்.

யோபுடைய அனைத்து பொருளாதாரங்கள் சாத்தானால் அழிக்கபட்டது. இரத்த சொந்தங்கள் கொல்லப்படுகிறது.கொடுமையான பருக்களால் அவதி இரட்டுடுத்தி சாம்பலில் அமர்நது இருக்கிறார் அபரிய அளவிற்கு பருக்களின் தொல்லை இவை அனைத்தும் ஏன் என்றால் யோபு ஆண்டவரை மறுதலிக்க வேண்டும் என்பது.

ஒரு மனிதன் எப்படிபட்ட விசுவாசத்தில் இருந்தாலும் தன் பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். தான் சம்பாதித்த பொருட்கள் அழிக்கபடும் நிலையில் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். தன் உடலுக்கு ஒரு உபத்திரவம் என்றால் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். இவைகள் அனைத்து உபத்திரவமும் சாத்தான் ஆண்டவரது அனுமதியுடன் யோபு பக்தனுக்கு கொடுக்கபட்டது. ஆனால் யோபு அவை அனைத்திலும் தன் நிலையில் இருந்து சற்றும் பின்வாங்க வில்லை ,பொருட்களும் பிள்ளைகளும் இழந்த பொழுது, கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் அவரது நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று தேவனுடைய நாமத்தை மகிமை படுத்தினார்.

(கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.(யோபு 1:21) அவரது விசுவாசத்தால் பலன் என்ன என்று பார்த்தால் முடிவில் இரட்டத்தனையான ஆசீர்வாதம், இழந்ததை ஆண்டவர் அவருக்கு இரட்டத்தனையாக திருப்பி கொடுக்கிறார். சோதனையில் வெற்றி இரட்டத்தனையான ஆசீர்வாதம். ஆமென்!

அடுத்தபடியாக ஆண்டவர் ஆபிரகாமை சோதிக்கிறார் யோபு ஒரு வகை என்றால் விசுவாசத்தில் ஆபிரகாம் மற்றும் ஒரு வகை, யோபுவை சோதிக்க ஆண்டவர் சாத்தானுக்கு அனுமதி அளிக்கிறார், ஆபிரகாம் வாழ்க்கையில் தானே முன் நின்று அவரது விசுவாசத்தை சோதிக்கிறார். எப்படி எனில் யோபுடைய பிள்ளைகள் கொல்லபடுகிற செய்தி யோபுடைய காதால் கேட்கிறார். (வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்(யோபு 1:19)என்று வேலைகாரர்கள் வந்து சொல்ல கேட்கிறார் ஆனால் விசுவாசத்தின் தந்தை என்று புகழப்படுகிற ஆபிரகாமின் வாழ்க்கையில் சோதனை என்னவென்று பார்த்தோமனால் 75 வயதில் ஆண்டவருடைய தூதரால் அருளப்பட்ட வார்தையின்படி அவருக்கு95 ஆம் வயதில் கிடைத்த புத்திரன் ஈசாக்கை ஆண்டவர் அவருக்கு பலியிட வேண்டும் என்று கேட்கிறார். எவ்வளவு பெரிய சோதனை அவர் ஒரு பெரிய செல்வந்தன் 300 வேலையாட்கள் கொண்டஒரு வீடு ஆனால் அதை சுதந்தரிக்க ஒரு வாரிசு இல்லாத நிலையில் ஆண்டவருடைய கிருபையால் வாரிசு கிடைக்கிறது ஆனால் அதையும் ஆண்டவர் தனக்கு பலியாக கொடுக்க வேண்டும் என்று சித்தம் கொள்கிறார், ஆபிரகாமின் மன நிலை எப்படி இருந்திருக்கும் சற்று சிந்தித்து பார்ப்போம், மனிதர்களுக்குள் அப்படி ஒரு நிலை வந்தால் அழுது புலம்பி ஆர்பாட்டம் செய்து கண்ணில்லையா மூக்கில்லையா வாயில்லையா என்று சொல்லி ஆண்வருடைய நாமத்தை தூஷித்துவிடுவார்கள்.

ஆனால் ஆபிரகாமோ ஆண்டவருடைய கட்டளைக்கு அப்படியே கீழ்படிந்தார். தன்மனைவியிடமோ அல்லது பிள்ளையாண்டனிடமோ கூட சொல்லவில்லை பலியிட போகிறோம் என்று சொல்லி மகனை அழைத்துக் கொண்டு நிர்ணயிக்கபட்ட இடத்திற்கு செல்கிறார்.

பிள்ளையாண்டானோ! அப்பாவுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளை தன் தந்தையிடம் கேட்கிறார் ஈசாக்கு, அப்பாவை பார்த்து பலியிட வேண்டிய அனைத்து பொருட்களும் இருக்கிறது ஆட்டு குட்டி எங்கே தந்தையே என்று கேட்கிறார், அப்பாவோ ,ஆண்டவர் பார்த்து கொள்வார் என்றவுடன் மகன் மௌனம் காக்கிறார்.

நிர்ணயிக்கபட்ட இடம் வந்தது, பலிபீடம் ஆயத்தமாகிறது, ஆயத்தமானவுடன் தன் ஏகசுதன் தவமிருந்து கிடைத்த மகனை அதிலே கிடத்துகிறார். அரிவாளால் தன் மகனை வெட்ட முற்பட்டு கழுத்துக்கு கத்தி கொண்டு செல்லபடுகிறது, ஆண்டவரது சத்தம் கேட்கிறது ஆபிரகாமே நிறுத்து பிள்ளையாண்டான் மேல் உன் கையை போடாதே என்று.

பிரியமான சகோதரனே சகோதரியே ஆண்டவரின் வார்த்தையை துளிகூட அடிபிசகாமல் அவர் வார்த்தையின்படி தன் மகனை ஆண்டவருக்கு பலிகொடுக்க ஆபிரகாம் சித்தமானார். அவர் விசுவாசம் எவ்வளவு பெரியது, சோதனை அதனிலும் பெரியதாக தெண்படவில்லை ஆபிரகாமிற்கு. ஆண்டவர் கேட்கிறார் அவர் கொடுத்ததை அவர் கேட்கிறார் யோபுக்கு இருந்த அதே மனநிலையில்தான் ஆபிரகாமும் இருந்திருப்பார்.

பிரியமான சகோதரனே சகோதரியே! ஆபிரகாமை ஆண்டவர் சோதித்தார் அந்த சோதனையில் அவர் வெற்றி கண்டார். ஆண்டவருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்பு கொடுத்தார் இந்த சம்பவத்தை குறித்து நாம் ( ஆதியாகமம் 22 வசனம் 1ல் இருந்து 12 ஆம் வசனம்வரை வாசிக்கும் போது இதை குறித்து அறிந்து கொள்ளலாம்) அதன் பின் நடந்தது என்ன?

அன்பான தேவ ஜனமே தேவ சித்தம் செய்தால் என்ன ஆசீர்வாதம் என்று பார்த்தால், சோதனையில் இருந்து வெற்றி யோபுக்கு இரட்டத்தனையான ஆசீர்வாதம்,இங்கே ஆபிரகாமிற்கோ ஆண்டவரின் பெருத்த ஆசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததிகளை வானத்து நட்சத்திரங்களை போலவும் கடற்கரை மணலை போலவும் ஆசீர்வதித்து வாக்குத்தத்தம் செய்கிறார். அதுமாத்திரம் அல்ல, ஆண்டவரது சொல்லுக்கு கீழ்படிந்ததால் ஆபிரகாமின் சகல சாதிகளும் பூமியில் ஆசீர்வதிக்கபட ஆண்டவர் கட்டளையிடுகிறார்.

சோதனைக்கு பணிந்து அவரது சொல்லுக்கு கீழ்படிவதால் உண்டாகும் ஆசீர்வாதம் நம் சந்ததிகள் பெருகும், அதுமாத்திரம் அல்ல சகல சாதிகளுக்கும் இந்த ஆசீர்வாதம் கிடைக்க தேவன் திருவுளம் பற்றினார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே! யோபுவையும் , ஆபிரகாமையும் குறித்து அவர்கள் எப்படி சோதனையில் இருந்து வெற்றி கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்கள் என்ன என்பதையும் தியானித்தோம்.

நமது வாழ்க்கையில் நம்மை சோதிக்க ஆண்டவர் திட்டமானால் நம் நிலை என்ன? பின்மாற்றமா? அல்லது ஆண்டவரது நாமம் தூஷிக்கிறவர்களாக இருப்பபோமா? நம்மை நாமே ஆராய்வோம்!

யாக்கோபு 1 :12 ல் வாசிக்கிறோம் சோதனையை சகிக்கிற மனிதன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கினபின் அவனுக்கு ஜீவ கிரீடம் அளிக்கபடும் என்பதை தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார் அதை சுதந்தரிப்பவர்களாக இலக்கை நோக்கி பயனிப்போம் அல்லேலுயா ! கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக ! ஆமென் !

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

## 2021 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடை

1. அப்போ– 1:3 – 40 நாட்கள்
2. அப்போ– 28:30 – 2 வருடங்கள்
3. அப்போ– 22:27 – சேனாபதி
4. அப்போ– 14:19 – யூதர்கள்
5. அப்போ– 13:1 – பர்னபா,நிகர்,லூகி,மனாயீன்,சவுல்
6. அப்போ– 7:58 – சவுல்.
7. அப்போ– 4:19 – பேதுருவும், யோவானும்
8. அப்போ– 8:40 – ஆசோத்
9. அப்போ– 9:25 – ஒரு கூடையிலே வைத்து
10. அப்போ–11:26 – அந்தியோகாவிலே
11. அப்போ– 12:25 தம்ம ஊழியத்தை
12. அப்போ– 18:11 – ஒரு வருடமும் ஆறுமாதமும்
13. அப்போ– 17:16 – அத்தேனே பட்டணம்
14. அப்போ– 21:40 –எபிரேய பாஷை
15. அப்போ– 28:11 – மிதுனம்

## 2021 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. எழிலரசி டேனியல்
Sis. ஷீபா அருண் இம்மானுவேல்
Sis. தயா இயேசுரெத்தினம்
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. வனிதா காளிமுத்து

**........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்..**

*ஆதியாகமம் 12:7*

"..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்;"

... (ஆதி - 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோ. அருள்மணி
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
செல்வன். டியோன் பென்சாம்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்சர்
சகோ. பாலகிருஷ்ணன்
சகோ. சாமுவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
சகோ. ஜினோ
செல்வன். ஜான்ராஜ் ராஜவேல்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்

சகோ. வினிஷ்
சகோ. ஜான் மில்லர்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
சகோ. ஜான்போஸ்கோ
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோ. யேசுரெத்தினம்
செல்வி. ஸ்டெகபானா சதீஸ்குமார்
செல்வி. அபியா செல்வி தர்மர்
சகோ. லாசர் ராஜமணி
சகோ. ராஜா ரவிச்சந்திரன்
செல்வி. ஜெஸ்வின் ஆ. யேசுதாஸ்
செல்வி. காட் கிப்ட் ஜஸ்டிஸ்
சகோதரி. எழில் டேனியல்ராஜ்
சகோ. பால் டேனியேல்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி . ஷீபா ஜவல்சிங்
சகோதரி. கீதா ஜெயக்குமார்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும (ஆதி .22:18)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. ஜெயசீலன்
திருமதி & திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்
திருமதி & திரு. சுகுமார்
திருமதி & திரு. சத்தியநாதன்

# 2021 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/03/2021 | சகோ. எபினேசர் | சகோ. தாமஸ் |
| 14/03/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. அசோக்குமார் |
| 21/03/2021 | சகோ. ஜினோ | சகோ.ஜெகநாதன் |
| 28/03/2021 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. சாம் ஆனந்த் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:30 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/03/2021 | சகோ.வில்சன் | சகோ.சுகுமார் |
| 12/03/2021 | சகோ. ஐசக் துரை | சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 19/03/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/03/2021 | சகோ.ஜோசப் | சகோ. ஜெயசேகர் |

11/03/2021 அன்று முழு இரவு ஜெபம்
இடம் – பாஹீலில் உள்ள சபையின் ஜெப வீடு
நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

26/03/2021 அன்று மாலை மாதாந்திர வாலிப ஐக்கிய கூடுகை
இடம் பாஹீலில் உள்ள சபையின் ஜெப வீடு
நேரம் மாலை 6:00 முதல் இரவு 8:00 மணிவரை
(பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் சகோ. சுகமார் அவர்களின் குடும்பம்)

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும்

# 2021 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. எவைகளை வாங்க வேண்டும்? எதை விற்கக் கூடாது?
2. ஜீவ ஊற்று எது? ஜீவ ஊற்று எங்கிருந்து புறப்படும்?
3. யாருடைய விருந்தாளிகள் நரக பாதாளங்களில் கிடக்கிறார்கள்?
4. யாருடைய கண்களைக் கழுகின் குஞ்சுகள் தின்னும்?
5. யாரை நாம் விடுவிக்கக் கூடுமானால் விடுவிக்க வேண்டும்?
6. யாருடைய வேர் அசையாது? யாருடைய வேர் கனி கொடுக்கும்?
7. லேமுவேலின் தாய் அவன் பெலனை யாருக்கு கொடுக்கக் கூடாது என்று போதிக்கிறாள்?
8. உன் சகோதரி யார்? உன் இனத்தாள் யார்?
9. நம் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு காத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் எதைக் காத்துக் கொள்ளவேண்டும்?
10. ஆகூர் தன் உபதேசத்தில் எந்த இரண்டு மனுவைக் கர்த்தரிடத்தில் கேட்கிறார்?
11. கோபாக்கினை நாளில் எது உதவாது?
12. யாருடைய கண்களுக்கு கர்த்தர் வெளிச்சம் கொடுக்கிறார்?
13. யாருடைய ஜெபம் கர்த்தருக்குப் பிரியமானது?
14. மூடனுடைய கோபம் எவ்விரண்டைக்காட்டிலும் பாரமாயிருக்கும்?
15. புருஷனுடைய கிரீடம் யார்? முதியோரின் கிரீடம் யார்?

விடைகளை வருகின்ற 20-03-2021 க்குள் (whatsApps #66015503-with Name)அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **நீதிமொழிகள்** புத்தகத்தில் இருந்து கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## ஜேம்ஸ் பிரேசர் (1886–1938)

உறைபனி தவழும் செங்குத்தான மலைகளையும், துஷ்ட மிருகங்கள் உலவும் காடுகளையும் கடந்து லிசு என்ற இனத்தவர் வாழும் சீனாவின் தென்மேற்குப் பகுதிக்கு தனது இருபத்திரண்டாவது வயதிலேயே ஊழியம் செய்ய இங்கிலாந்திலிருந்து சென்றவர் ஜேம்ஸ் பிரேசர். 1886–ம் ஆண்டு லண்டன் மாநகரில் பிறந்த ஜேம்ஸ் ஒரு கிறிஸ்தவ விசுவாசக் குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ நெறிகளில் வளர்க்கப்பட்டார். தன்னுடைய பள்ளிப் படிப்பில் சிறந்து விளங்கிய இவர் லண்டன் பல்கலைக்கழக மெட்ரிகுலேஷன் தேர்வில் இங்கிலாந்து நாட்டின் சிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ச்சி பெற்றார். கல்லூரி நாட்களில் பக்திக்கடுத்த காரியங்களில் அதிக சிரத்தை காட்டியதோடு ஓய்வுநாள் பள்ளி ஊழியத்திலும் ஈடுபட்டு வந்தார். தான் ஒரு முழுநேர ஊழியனாகச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி அவர் ஒருநாளும் நினைத்துப் பார்க்கவில்லை. தான் ஒரு தலை சிறந்த பொறியியல் வல்லுநர் ஆக வேண்டுமென்ற வாஞ்சையே அவரது உள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆனால் அவரது பக்தியுள்ள தாயாரான ஆனி பிரேசர் தனது பிள்ளைகளில் ஒருவராவது மிஷனெரியாக மாற வேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்து வந்தார்.

ஜேம்ஸ் தான் எதிர்பார்த்தது போலவே தனிச்சிறப்பான வகையில் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சிபெற்றார். அப்போது அவர் வாசித்த ஒரு சிறுபுத்தகம் அவருடைய வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைத்துவிட்டது "அப்படிச் சொல்லாதீர்கள்" என்று தலைப்பிட்ட அந்த சிறு புத்தகம் சீனாவில் அருட்பணியாளராக ஊழியம் செய்த ஒருவரால் மிஷனெரி ஊழியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதப்பட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டு துவங்கிவிட்ட பின்னரும் இன்னும் உலகத்தில் பெரும்பாலானோர் இரட்சிப்பின் செய்தியைக் கேள்விப்பட மிஷனெரிப்பணி என்பது போதகர்களும் சபைகளும் மட்டுமே கவனிக்க வேண்டிய காரியங்கள் என்று சொல்லாதீர்கள் என்று அவர் அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். ஜேம்ஸ் இத்தகைய மனோபாவத்தைத்தான் கொண்டிருந்தார். எனவே அப்புத்தகத்தை வாசித்தது முதல் அவர் அருட்பணி ஊழியங்களைப் பற்றி சிந்திக்கத் துவங்கினார். மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறுகளை வாசிக்கத் துவங்கினார்.

சீன உள்நாட்டு அருட்பணி சங்கத்தை நிறுவி சீனாவில் வல்லமையாக ஊழியம் செய்த ஹட்சன் டெய்லரின் வாழ்க்கை வரலாறு அவர் உள்ளத்தை அதிகம் தொட்டது. ஒரு நாள் தனது வீட்டின் மேலறையில் ஜெபிக்கும்போது சீன நாட்டு மக்களைப் பற்றிய பாரம் அழுத்தவே தன்னை ஊழியத்துக்கு அர்ப்பணித்தார். ஜெபித்து முடித்து தன் தாயின் அருகே வந்து நான் முழுநேர ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறேன் என்று உற்சாகத்தோடு கூறினார். முழங்காற்படியிட்ட ஆனி பிரேசர் தனது நீண்ட கால ஜெபம் கேட்கப்பட்டதற்காக தேவனைத் துதித்தார். அதுமுதல் ஊழியத்திற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபட்ட அவர் தன்னைச் சுற்றி வாழும் மக்களுக்கு இயேசுவைச் சொல்லும் ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

சீனநாட்டின் தென்மேற்குப் பகுதியில் பர்மிய நாட்டு எல்லைக்கு அருகேயிருந்த டெங்குவே என்ற சிறிய பட்டணத்தில் அவரது ஊழியப் பயணம் ஆரம்பமானது. அங்கு முதல் ஆறுமாதம் சீன மொழியைக் கற்றார். இந்தப் பகுதியில் சீனர்கள் மட்டுமின்றி

ஹாரன், கக்கின், லிசு போன்ற பழங்குடி இனத்தவர்களும் வாழந்து வந்தனர். எளிய ஆடையுடன் வடக்கே மலைப்பகுதியிலிருந்து ஆறு நாட்கள் பணயம் செய்து டெங்குவே வந்து ஒரு நான்கு பேர் தங்கள் மலைப்பகுதியில் வந்து ஊழியம்செய்ய அழைத்தனர். சீன மொழியில் பயிற்சி பெற்று பிரசங்கம் செய்யும் அளவு தேர்ச்சிபெற்ற நிலையில் லிசு இனத்தவரை நோக்கி தனது பயணத்தைத் தொடர்ந்தார். வாய்ப்பு வரட்டும் என்று காத்திருப்பது சாத்தானின் சோதனைகளில் ஒன்று என்றும் ஊழியத்துக்கான வாய்ப்புகளுக்காக் காத்திருக்கும்படி வேதாகமம் ஒருபோதும் நமக்குப் போதிக்கவில்லை. கைக்குக் கிட்டும் கரியங்களில் ஊழியம் செய்யும்படியே கட்டளையிடுகிறது என்று தனது டைரியில் எழுதி வைத்தார் ஜேம்ஸ் பிரேசர்.

லிசு பழங்குடியினர் மலைச்சரிவுகளில் வசித்து வந்தபடியால் சீனர்கள் இவர்களைக் குரங்கு மனிதர்கள் என்றே அழைத்தனர். ஆனால் இவர்களே சீனாவின் பூர்வக்குடிகள் என்று வரலாறு தெரிவிக்கிறது. லிசு மக்களை நோக்கிப் பயணத்தைத் துவங்கும்போது ஜேம்சுக்கு வயது இருபத்திரண்டு மட்டுமே. வெகுநாள் பயணத்திற்குப் பிறகு பாவோஷானுக்கு அருகேயுள்ள மலைத் தொடர்கள் உள்ள பகுதியை வந்தடைந்தார். அப்பகுதியில் இலட்சத்துக்கும் மேற்பட்ட லிசு பழங்குடியினர் வசித்து வந்தனர். இவர்கள் நற்செய்தியை அதுவரை கேள்விப்பட்டதில்லை. எந்த மிஷனெரியும் அங்கு சென்று ஊழியம் செய்ததும் கிடையாது.

1913–ஆம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் டெங்குவே நீர்வீழ்ச்சிக்கு அருகே தனது முதல் ஞானஸ்நான ஆராதனையை நடத்தினார். அதில் தனது சமையல்காரரோடு கூட ஒரு ஆசிரியரும், தண்ணீர் சுமப்பவரான டாஸ் என்பவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஜேம்ஸ் முதலாவது இவர்களது மொழியைக் கற்க ஆரம்பித்ததோடு தாய் மொழியில் அவர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்ல ஆரம்பித்தார். பிரேசர் தனது உடைப் பழக்கத்திலும் லிசு பழங்குடிகளின் ஆடை அலங்காரத்தையே பின்பற்றினார். இப்போது அவரால் லிசு மொழியில் சரளமாகப் பேசமுடிந்தது. சுவிசேஷத்தால் கவரப்பட்ட லிசு இனத்தவர் தாங்கள் அம்மட்டும் வணங்கி வந்த பேய் மேடையைக் கொளுத்திவிட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

பிரேசர் பணிமூலம் 129 குடும்பங்களைச் சேர்ந்த 600–க்கும் மேற்பட்டவர்கள் ஆதாயம் பண்ணப்பட்டனர். மாட்டில்ட் ஹில் என்ற இடத்தில் சிற்றாலயமும் கட்டப்பட்டது. லிசு மொழியில் வேதத்தை மொழி பெயர்க்க ஆரம்பித்து மாற்கு, யோவான் சுவிசேஷத்தை முதலில் மொழிபெயர்த்து முடித்தார் பிரேசர். பல தன்னார்வ லிசு நற்செய்தியாளர்களை ஏற்படுத்தி, அவர்களுக்கும் ஊழியம் செய்ய பயிற்சி கொடுத்தார். முன்னோடி மிஷனெரி ஊழியத்தில் மூழ்கியிருந்த ஜேம்ஸ் பிரேசருக்கு தனது மணவாழ்வைப்பற்றி தீவிரமாய் யோசிக்க நேரம் இருக்கவில்லை. தனது 43–வது வயதில் ஊழியத்தம்பதியினரான பிராஸ்க் டைமண்ட் தம்பதியினரின் மகளான ராக்சியை தன் வாழ்க்கைத் துணையாகத் தெரிந்தெடுத்து மணந்து கொண்டார்.

(மிஷனரி பகுதியின் தொடர்ச்சி பக்கம் 36 )

இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும், பாவம் பூரணப்படும்போது மரணத்தை பிறப்பிக்கும். யாக்-1:15

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

வாலிப வயதில் பிசாசானவன் கொண்டு வரும் சோதனை இச்சை. இந்த சோதனையில் வேதத்தில் அநேக அபிஷேகம் பெற்ற ஜாம்பவான்கள் கூட வீழ்ந்து போனதாக பார்க்க முடிகிறது.

## வாலிபர்களின் இருதயத்தை குருடாக்குதல்..

ஒரு மனிதனின் முக்கியமான பருவம். இளம் வயது மற்றும் வாலிப பருவம் (18 – 25) இந்த வயதுதான் ஒரு மனிதனின் வாழ்க்கையை முழுவதும் தீர்மானிக்கக்கூடிய வயது. இந்த வயதில்தான் பிசாசு அநேகரை வீழ்த்தி தன் வலையில் விழ வைக்கிறான். சாலமோன் இதைத்தான் எச்சரிக்கிறார்.

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" நீதி–4:23

இந்த வயது துளிர்விட்டு எழும்பி கிளை விடும் காலம் இதில் பிசாசு உலகப்பிரகாரமான காரியங்களை கொண்டு வருவான். சமூக வலைதளங்களில் பிசாசு வைத்திருக்கும் வலையில் விழச்செய்வான். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை பார்க்கச் செய்து தனக்கு சொந்தமாக்கி கொள்வான்.

## தாவீது ராஜா இச்சையில் விழ்ந்தான்..

2–சாமு–11–ம் அதிகாரத்தில் 2–ம் வசனத்தில் வாசிக்கும்போது தாவீது ராஜா தேவன் தன் இருதயத்திற்கு ஏற்றவன் என சாட்சிக் கொடுத்து கர்த்தரால் சாமுவேல் தீர்க்கதரிசியை கொண்டு அபிஷேகம் பெற்று பல்வேறு யுத்தத்தில் சிறந்து விளங்கி அநேக தேசங்களை கைப்பற்றின இந்த தாவீது ராஜாவின் இருதயத்தில் இச்சையானது கிரியை செய்தது.

2–சாமு–11:2–ல் ஒரு ஸ்தீரியைக் கண்டான் அந்த ஸ்தீரி வெகு சௌந்தரியாயிருந்தாள் என வேதம் சொல்கிறது. பின்னர் அந்த ஸ்தீரி யார் என்று விசாரிக்கும்படி ஆள் அனுப்பி அது உரியா என்பவரின் மனைவி என அறிந்தும் அவளோடு கூட சயனித்தான் என வாசிக்க முடிகிறது. அவள் மேல் இச்சையெனும் மோகத்தால் பத்சேபாள் என்னும் அந்த ஸ்தீரியின் கணவராகிய உரியாவை கொன்று அவள் மனைவியை தனக்கு சொந்தமாக்கி கொண்டான்.

2–சாமு–11:27–ஆம் வசனத்தில், தாவீது செய்த இந்த காரியம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பாயிருந்தது என்று வேதம் சொல்கிறது. எனவே நாத்தான் தீர்க்கதரிசியைக் கொண்டு தேவன் தாவீதை எச்சரித்து அவன் இச்சையின் நிமித்தம் பெற்ற பிள்ளையை அடித்தார். அது அலங்கோலமாக பிறந்து ஏழாம் நாளில் இறந்தது என்று வாசிக்க முடிகிறது.பின்னர் தாவீது மனந்திரும்பி கர்த்தருடைய பாதத்தில் முழங்காற்படியிட்டு தன் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபத்தின் மூலம் தேவன் சாலமோனைக் கொடுத்து கனப்படுத்தினார்.

தாவீது ராஜா தவறுகளை அறிக்கையிட்டு ஜெபித்தார் கர்த்தர் மனமிறங்கி சந்ததியை ஆசீர்வதித்தார்.

## சிம்சோன் இச்சையில் வீழ்ந்தான்..

நியாதிபதிகள் 14–ம் அதிகாரத்தில் சிம்சோனைக் குறித்து பார்க்கும் போது சிம்சோன் இச்சைக்கு இடம் கொடுத்து பெலிஸ்திய ஸ்தீரியில் ஒரு பெண்ணை மோகம் கொண்டான்.

இந்த சிம்சோனைக் குறித்து முழுவதும் வாசித்து தெரிந்தோமென்றால் இஸ்ரவேல் ஜனங்களை ஆள தேவன் தெரிந்து கொண்டவர்களில் சிம்சோனுக்கு முன்னும் பின்னும் யாருக்கும் கொடுக்கப்படாத ஒரு பெலன் சிம்சோனுக்கு கொடுக்கப்பட்டது. காரனம் இன்னும் அநேக தேசங்களை கைப்பற்ற அந்த பெலன் தேவை என தேவன் கொடுத்தார்.

ஆனால் சிம்சோன் வழியோ தவறாய் சென்றது. நியாதிபதிகள் 14:5,6–ம் வசனத்தில் ஒரு பாலசிங்கம் ஒன்றை அவனுடைய பெலத்தால் ஆட்டுக்குட்டியை கிழித்து போடுவது போல் பாலசிங்கம் என்னும் தடையை மீறி மீண்டும் வழியை இச்சைக்கு நேராகவே அழகான பெண்ணாய் காணப்பட்ட பெண்ணிடம் இருந்து விடுதலை கொடுக்கும் பிரகாரமாக அந்த பெண்ணுக்கு வேறு திருமணம் முடிந்து தடை செய்தார். ஆனால் தேவன் அவன் வாழ்க்கையில் ஏன் இதை தடை செய்தார் என உணராதவனாய் மீண்டும் இச்சையில் விழுந்து தெலிலாள் என்ற பெண்ணோடு காதலில் விழுந்து தேவனுக்கு விரோதமாய் வாழ்ந்தான். முடிவிலே அவன் கண் பார்வை இரண்டும் பிடுங்கப்பட்டு மடிந்து போனான் என்று வாசிக்க முடிகிறது.

## யோசேப்பு இச்சைக்கு விலகி ஓடினான்..

ஆதி–39–ம் அதிகாரத்தில் வாசித்தோமானால் யோசேப்பு மிகவும் சௌந்தரியமுள்ள வாலிபனாயிருந்தபடியினால் இச்சை என்னும் சோதனை அவனுக்கு வந்தது. யோசேப்பு தேவனுக்கு பயந்தவனாயிருந்தபடியால் இச்சைக்கு விலகி ஓடினான். ஆதி–39:9–ல் யோசேப்பு சொல்கிறான், "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி" என்று தன் உடையை உதறி தள்ளிவிட்டு ஓடினான் என்று வாசிக்க முடிகிறது. அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, வாலிப நாட்களில் பிசாசு கொண்டு வரும் இச்சைக்கு இந்த யோசேப்பு விலகி ஓடினதினிமித்தம் எஜமானாக ஒரு பெரிய அதிகாரியாக உயர்த்தப்பட்டான். கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை அவன் வாழ்க்கையில் நிறைவேற்றினார்.

இதை வாசிக்கிற நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு விரோதமாய் பாவம் செய்யக்கூடாது என்று விலகி ஓடும்போது கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களை செய்வார். கர்த்தர் தாமே நம் அனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக,ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே.

## சகோதரிகள் பகுதி

# சோதனைகள் மத்தியில் ஆசீர்வாதங்கள்

அன்பு சகோதர சகோதரிகளுக்கு மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன். ஏசா–48:10

கர்த்தர் நம் வாழ்க்கையில் எரிகிற அக்கினி சூளையைப் போல சூழ்நிலைகளை அனுமதிக்கிறார் காரணம் நம் தேவன் உண்மையுள்ளவர் என்பதையும் எல்லா நேரங்களிலும் நம்மை காக்கிறவர் இரட்சகர் அவரே என்பதையும் நாம் உணரவேண்டும் என்பதற்காக அப்படி செய்கிறார். உபத்திரவங்களில் குகையுடனாக கடந்து செல்லும்போது நம்மை விட்டு நீங்காத தேவனுடைய பிரசன்னத்தை உணர்வோம். விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்க்கையிலும் உபத்திரவம் என்னும் குகை சுத்திகரித்தல் வனைதல் அபிஷேகத்தல் மற்றும் நிரப்புதல் உண்டு. நாம் கிறிஸ்துவுக்கு மெய்யான மணவாட்டியாய் மாற வேண்டும் என்கிற உன்னத நோக்கமே அதற்கு காரணம்.

நாம் தேவனால் அழைக்கப்படும் போது அந்த அழைப்பு மலர்ப்படுக்கை அல்ல. மாறாக உபத்திரவத்தின் குகை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவரே இந்தப் பாதையை நமக்கு அனுமதித்தார் என்பதையும், அவர் ஒருவரே இதிலிருந்து நம்மை இரட்சிக்கப் போகிறார் என்பதையும் அவர் நிரூபிப்பார். சாதாரணமாக சூடாக்கப்படுவதை விட ஏழு மடங்கு அதிகமாக சூடாக்கப்பட எரிகிற அக்கிச் சூளையின் நடுவில் சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ என்பவர்களின் வாழ்க்கையிலிருந்த அழைப்பை தேவன் நிரூபித்தார்.

அக்கினி நடுவில் நாலாம் ஆளாகக் கர்த்தர் எழுந்தருளினார். அக்கினியின் நடுவில கட்டுகளெல்லாம் அறுக்கப்பட்டவர்களாய் அவர்கள் விடுதலையாய் உலாவினார்கள். அக்கினியின் நடுவில் கட்டப்பட்டவர்களாய் போடப்பட்டாலும் அந்த அக்கினியினால் அவர்களைக் கட்டியிருந்த கட்டுகளெல்லாம் அறுந்து போயின. அவர்களுக்கு ஒரு சேதமும் உண்டாகவில்லை. காரணம் தேவ குமாரன் அவர்கள் மத்தியில் உலாவினார். தேவன் அவர்களைத் தமக்குச் சொந்தமாகத் தெரிந்து கொண்டார் என்பதும், அவர்களுடைய வாழ்க்கையில் காணப்பட்ட தேவனுடைய அழைப்பு நிரூபிக்கப்பட்டது.

இன்றும் எரிகிற அக்கினச் சூளை போன்ற அனுபவங்களினூடாக நாம் கடந்து செல்போமானால் அமைதியாயிருப்போம். எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மோடிருக்கும் தேவன் நம்மை விடுவித்து மகிமைப்படுத்துவார்.

"உபத்திரவங்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்லும் படிக்கட்டுகள்..

கர்த்தாவே உபத்திரவங்களின் நடுவில் நீர் எங்களோடிருப்பதால் உமக்கு நன்றி. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி,
எப்சிபா ஸ்டீபன் ஊழியங்கள்

# அறிவிப்பு பலகைகள் (Notice Boards)

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எச்சரிக்கவும். நமக்கு வழிகாட்டவும் அநேகம் அறிவிப்பு பலகைகள் தெருக்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்பிடக் கூடிய சிலவற்றை இங்கே கவனிப்போம்.

## 1. அபாயம் (Danger)

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ.6:23)
(2) பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்.18:4,18)
(3) உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண்.32:23)

## 2. இங்கே நடக்கக் கூடாது (Don´t walk here)

(1) துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே (சங்.1:1)
(2) மாம்சத்தின்படி நடவாதே (ரோ.8:1,4,5,– 2.பேது.2:7,10)
(3) ஒழுங்கற்று நடவாதே (2.தெச.3:6, 2.கொரி.4:2, எபேசி.4:17, 5:15)

## 3. நல்வரவு (Welcome)

(1) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28)
(2) எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் (மத்.22:4, லூக்.15:28)
(3) கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவரே,
உள்ளே வாரும் நீர் வெளியே நிற்பானேன் (ஆதி.24:31).

## 4. சாப்பாடு தயார் (Meals Ready)

(1) ஜீவ அப்பம் நானே, என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு.
(யோ.6:48,54 –56, 1.கொரி.11:26, 10:16–17)
(2) என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன் (லூக்.15:17, ஆதி.25:34)
(3) கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்(ஏசா.23:18, (1.இராஜா.17:1–6)

# கடந்தமாத
# நிகழ்வுகள் சில
# தங்களின்
# பார்வைக்கு







உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்
99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . பியூலா ஜெகநாதன்
95542834

வாலிப ஐக்கிய தலைவர் –
சகோ. ஆரோக்கியராஜ்
66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only